[1990 ஏப்ரல் 2

2. பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்களைத் தற்காலிக நீக்கம் செய்துள்ளது தொடர்பான அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை யன்று பேரவைத் தலைவருடைய ஆணையின்பேரில் வெளியேற் றப்பட்டார்கள். அன்றைக்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி அந்த ஒருநாள் மட்டும்தான் அவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக்கூடாது என்பது விதியாகும். எனவே, வளாகத் தில் இருக்கின்ற அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் அவைக்கு வந்து, இப்போது அவர்களுடைய உரிமை மீறல் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்பட இருப்பதனால், அது தொடர்பாக அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

3. உரிமை மீறல் பிரச்சினைகள்

(அ) முதலமைச்சர் மீது—இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தினர் பற்றியும் திரு. ராஜிவ்காந்தி பற்றியும் அவையில் தெரிவித்த கருத்துக்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குமரி அனந்தன், திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பேரவை யில் மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்களைப் பற்றியும், இந்திய இராணுவத்தைப் பற்றியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தவறான தகவல்களைத் தந்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு, அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்புகளைக் கொடுத் துள்ளார்கள். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதனைச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள் கிறேன். முதலில், திரு. குமரி அனந்தன் அவர்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்திய இராணுவம் என்றும், ராஜிவினுடைய ராணுவம் என்றும் ராஜிவினுடைய படை இலங்கையில் என் ஜாதிக்காரனாகிய தமிழர்களைக் கொன்றுக் குவித்தது என்றும், ராஜிவ் காந்தியைக் கண்டித்தே நான் அமைதிப் படையை வரவேற்கச் செல்லவில்லை என்றும் முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ராஜிவ் காந்தி அவர்கள் இந்த அவையிலே இல்லை என்றாலும், அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் எங்கள் கட்சித் தலைவரினுடைய மரியாதையைக் காப்பாற்று வதன்மூலமே கட்சியினுடைய மரியாதையைக் காப்பாற்ற இயலும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் அவருக்கு இருக்கின்ற பாதுகாப்பைப் பயன்படுத்திக் கொண்டு,